முரசொலி பாசறை

மதுரை 08.08.2023

# எழுதி வளர்ந்த இயக்கம்

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்

28

திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...

## மண்ணையும் மக்களையும் வாழவைத்த மாமனிதர்!













“அப்படி என்ன செய்து கிழித்துவிட்டார் கலைஞர்?” என்று கேட்பவர்கள் இன்றும் நம்மிடையே உண்டு. அப்படிக் கேட்பவர்களில் மிகப் பலர், அவர் கொண்டு வந்த திட்டங்களால் நன்மை பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதுதான் ஒரு நகை முரண்!

அண்மையில் ஒரு நபர், சிறுபான்மையினருக்கு தி.மு.க. செய்த ஒரு நன்மையை, ஒரே ஒரு நன்மையையாவது சுட்டிக்காட்ட முடியுமா என்று கேட்டார். உடனே சமூக வலைதளங்களில், சிறுபான்மையினருக்கு கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு செய்துள்ள பல்வேறு நன்மைகள் பட்டியலிடப்பட்டன.

பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது, சிறுபான்மையினர் நல ஆணையத்தை 1989- இல் உருவாக்கியது, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மாணவியருக்கு, சென்னையில் உணவு மற்றும் தங்கும் வசதியுடன், இலவச விமானப் பணிப்பெண் பயிற்சி அளித்தது என்று பல்வேறு திட்டங்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்தன.

இப்படித்தான் தி.மு.க. ஆட்சியில், அணைகளே கட்டப்பட்டதில்லை, அவையெல்லாம் காமராஜர் காலத்தோடு முடிந்துவிட்டன என்று சிலர் பொய்பேசித் திரிந்தபோது, கலைஞரின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட 56 அணைகளின் பெயர்கள் வரிசையாய் வலம் வந்தன!

சரி, ஒவ்வொரு முறையும் இப்படி உண்மைகளைத் தேடித் தேடிச் சொல்லிக் கொண்டிருப்பதா? அவர் செய்த நன்மைகளை எல்லாம் அடுத்தடுத்த தலைமுறைக்குத் தொகுத்துக் கொடுக்க வேண்டாமா என்னும் கேள்வி நமக்குள் எழுவது இயற்கை!

இத்தகைய நம் ஏக்கத்தைப் போக்கும் வகையில், புலவர் முத்து வாவாசி ஓர்அரிய நூலை- உண்மையிலேயே மிக மிக அரிய நூல் ஒன்றினை - வெளிக் கொண்டு வந்துள்ளார்! ‘கலைஞர் செதுக்கிய தமிழகம்’ என்னும் அந்த நூல் நான்கு தொகுதிகளை உடையதாக உள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் ஏறத்தாழ 600 பக்கங்கள்!

### சாதனைகளின் புதையல்

தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 1969-76, 1989-91, 1996-2001, 2006-11 ஆகிய காலங்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களோடு, அறிஞர் அண்ணா முதல்வராக இருந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் குறித்தும் இந்த நூல், தொகுத்தும், துறைவாரியாகப் பகுத்தும் சொல்கிறது!

“எதிர்க்கட்சி நிலையில் இருந்த காலத்தில், என்னென்ன கழக லட்சியங்கள் எதிரொலிக்கப் பட்டனவோ, அவற்றையேதான் நான் முதலமைச்சரான பிறகும் செயல்படுத்திட முனைந்திருக்கிறேன்” என்று **‘நெஞ்சுக்கு நீதி’**யில் கலைஞர் எழுதியிருப்பார். அந்த வரிகளில் இருக்கிற ஒவ்வொரு சொல்லும் உண்மை பேசுகிறது என்பதை இந்த நூல் நமக்கு எடுத்துக்காட்டுகிறது!

எத்தனை செய்திகள், எத்தனை புள்ளி விவரங்கள் - இவை அனைத்தையும் தொகுப்பதற்கு எவ்வளவு உழைப்பு தேவைப்பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இந்தத் தொகுதிகளின் நூலாசிரியருக்கு, நாம் தலைவணங்கி நன்றி சொல்ல வேண்டும் போலத் தோன்றுகிறது!



முத்து வாவாசி

துறைவாரியாக மட்டுமல்லாமல், கால வரிசையின் அடிப்படையிலும் செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. எனவே எந்த ஒன்றையும் தேடி அறிவது மிக எளிதாக இருக்கிறது. வேளாண்மைக்கு என்னென்ன செய்திருக்கிறார், தொழிலாளர்களுக்கு எப்படித் துணைவராக இருந்திருக்கிறார், தமிழ் மொழிகாக்க, தக்கப் பணிகளை எல்லாம் எவ்வெப்போது செய்து முடித்திருக்கிறார் என அனைத்தையும் சில நிமிடங்களில், இந்த நூலின் உதவியைக் கொண்டு நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது!

### வீரம் செறிந்த ஆயுதம்

பொதுவாக, நாம் கலைஞர் செய்த நன்மைகள், கொண்டு வந்த திட்டங்கள் குறித்துப் பேசுகிறோம் என்றாலும், இந்த நூலைப் புரட்டும் போதுதான், “அடடா, இவ்வளவு செயல்களையா இந்த மனிதர் செய்திருக்கிறார்” என்று நாமே வியந்து போகிறோம்! ஒரு மனிதரால் இவ்வளவும் செய்ய முடியுமா என்று அதிர்ந்தும் போகிறோம்!

எடுத்துக்காட்டுக்கு ஒரு சிலவற்றை நாம் பார்க்கலாம். மிகப்பெரிய, அடிக்கடி பேசப்படுகிற திட்டங்களை எல்லாம் தாண்டி, சின்னச் சின்னத் திட்டங்கள் பற்றிய செய்திகள் கூட இந்நூலில் நுட்பமாகத் தரப்பட்டுள்ளன. உடன்குடி அனல் மின் நிலையம் கலைஞரால் திட்டமிடப்பட்டது என்பதை நாம் அறிவோம். அது எப்போது திட்டமிடப்பட்டது, அதற்கான திட்டமதிப்பீடு எவ்வளவு, அதை உருவாக்குவதற்கான கால இலக்கு என்ன என்று அனைத்து விவரங்களும் நூலில் நமக்கு கிடைக்கின்றன!

ஆயிரக்கணக்கான திட்டங்களை வகுத்து, அவற்றை நிறைவேற்றி, மக்களும் சமூகமும் மேம்பாடு அடையக் கலைஞர் தன் வாழ்நாளெல்லாம் உழைத்திருக்கிறார் என்பதை இந்த நூல் உரத்துச் சொல்கிறது!

எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலேயே நெசவாளர் துயர் துடைக்கத் திட்டங்கள் பலவற்றைக் கொண்டு வந்த கட்சிதான் தி.மு. கழகம்! ஆட்சிக்கு வந்த பிறகு, நெசவாளர் நல்வாழ்வு திட்டத்தின் கீழ், 1996-97 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆண்டு வரையில், 29,980 நெசவாளர்கள் பயனடையும் வகையில், 2 கோடியே 68 லட்சம் ரூபாயை மானியமாகக் கலைஞர் அரசு தந்துள்ளது. அது மட்டுமல்லாமல், கைத்தறி நெசவில் பெண்கள் அதிக அளவு ஈடுபடுவதால், பெண்களுக்காகவே தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதை ஊக்குவிக்க, அந்தச் சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் விளிம்புத் தொகையாக வழங்கும் திட்டமும் நிறைவேற்றப் பட்டுள்ளது!

இவ்வாறு ஒருபுறம் மக்கள் நலத் திட்டங்களும், மறுபுறம் கொள்கை சார்ந்த திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. கை ரிக்சா ஒழிப்புத் திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம் போன்றவைகளைத்தான் நாம் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறோம். இவை தவிர்த்த ஆயிரக்கணக்கான திட்டங்களை வகுத்து, அவற்றை நிறைவேற்றி, மக்களும் சமூகமும் மேம்பாடு அடையக் கலைஞர் தன் வாழ்நாளெல்லாம் உழைத்திருக்கிறார் என்பதை இந்த நூல் உரத்துச் சொல்கிறது!

பொய்யும் புனைவும் மிகுதியாகி விட்ட இக்காலத்தில், கலைஞர் ஆட்சியில் செய்யப்பட்ட நன்மைகளை எல்லாம் திரை போட்டு மறைக்க முயலும் கீழானவர்கள் நிறைய பேர் வாழும் இக்காலத்தில், இந்த நான்கு தொகுதிகளும் நம் கைகளில் இருக்குமானால், உடனுக்குடன் விடை சொல்ல முடியும். பொதுக் கூட்டங்களில், கருத்தரங்குகளில், தொலைக்காட்சி விவாதங்களில், இந்த நான்கு தொகுதிகள் நம் கைகளில் வெறும் நூல்களாக மட்டுமல்லாமல், வீரம் செறிந்த ஆயுதங்களாகவும் விளங்கும்.

இவை போன்ற நூல்களை வாங்குவதற்கு நாம் செலவிடும் பணம், வெறும் செலவன்று, முதலீடு!

-வாசிப்போம்

## ஃப்ளாஷ்பேக்



### கூட்டத்தில் கதராடை!



கோபி

1984-ஆம் ஆண்டில், வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஒன்றியம் மேல் முட்டுக்கூர் என்ற ஊரில் கழகப் பொதுச் செயலாளர், இனமான பேராசிரியர் அவர்கள் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். நானும் எனது நண்பரும் பேராசிரியரின் வீரம் செறிந்த பேச்சைக் கேட்டுவிட்டு வீடு திரும்பினோம். அந்தக் கூட்டத்தில் அவருக்குக் கதராடை அணிவித்துச் சிறப்புச் செய்தோம். 39 ஆண்டுகளுக்கு முன் நடந்த இந்த நிகழ்வை இப்போது நினைத்தாலும் பெருமையாக இருக்கும்.

**-சி.கோபி, மாநிலத் துணைச் செயலாளர், தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, கே.வி.குப்பம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## திராவிட இயக்க இதழ்கள் - இளந்தமிழன்

1954-ஆம் ஆண்டு பர்மாவில் நடந்தது அனைத்துலக புத்த சமய மாநாடு. அதில் அண்ணல் அம்பேத்கரும் தந்தை பெரியாரும் கலந்துகொண்டனர். அதன் நேரடி சாட்சி எழுத்தாளரும் கவிஞருமான நாரா.நாச்சியப்பன்.


பெரியார் பர்மா வந்தது முதல் செல்லும் வரை உடனிருந்தவர். இராமநாதபுரம் ஆத்தங்குடியில் 1927-ஆம் ஆண்டு பிறந்தவர். பர்மாவில் வாழ்ந்தவர். ‘பாவலர் நாரா.நாச்சியப்பன்’ என்று அறியப்பட்டவர்.

பின்னர் தமிழகம் வந்து ‘பொன்னி’ இதழில் துணையாசிரியராகப் பணிபுரிந்து விட்டுச் சில காலம் கழித்து ‘இளந்தமிழன்’ என்ற இதழை ஆசிரியராக இருந்து நடத்தினார். அவரது 42 நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. அவர் எழுதியதில் ‘குருகுலப் போராட்டம்’, ‘பர்மாவில் பெரியார்’ என்ற இரண்டு நூல்கள் முக்கியமானவை.

1972-அக்டோபர் 1-ஆம் தேதி ‘இளந்தமிழன்’ மாத இதழாக வெளிவந்தது. அந்த இதழ் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் வெளியீடாக வந்தது. இதழின் முதல் பக்கத்தில் ‘தமிழ்த்தாய் வாழ்த்து’, ‘தமிழ்த்தாய் வணக்கம்’ என்று இடம்பிடித்துள்ளது. அடுத்தடுத்து வந்த இதழ்களின் முதல் பக்கத்தில் அடிக்குறிப்பாக ‘பொங்கும் மங்களம் எங்கும் தங்குக’ என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.

இந்த இதழுக்கு வாழ்த்துரை வழங்கிய




முத்தமிழறிஞர் கலைஞரை ‘தமிழவேள்’ என்று அடைமொழியுடன் குறிப்பிட்டுள்ளது.

“மொழி பலவும் பெற்றெடுத்தும் தமிழ்த்தாய் சற்றும் முதிராத ‘இளங்கன்னி’ யாகவே திகழ்கின்றாள். ‘தமிழ் எங்கள் இளமைக்குப் பால்’ என்றார் பாவேந்தர். அத்தகைய தமிழின்பத்தை மாந்திப் பயன் பெறுவோர் என்றும் இளந்தமிழராகவே நின்று நிலவுவர் என்பதில் ஐயமில்லை. பாவேந்தர் பரம்பரைக் கவிஞர்களில் ஒருவரான கவிஞர் நாச்சியப்பன் ‘இளந்தமிழன்’ என்னும் பெயரில் இலக்கியத் திங்கள் இதழ் ஒன்றினைத் தமிழினத்தின் வாழ்வு நலங்காத்துத் தமிழுக்குப் பெருமை தேடித் தந்த பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் வெளிக் கொணர இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ‘இளந்தமிழன்’ தமிழ் இலக்கிய வானில் ஒரு முழுநிலவாகத் தவழ்ந்து ஒளிதர வேண்டும் என்று விரும்பி மனமார வாழ்த்துகிறேன்” என்று கலைஞர் இந்த இதழுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளார்.

## கருவூலம்

### மதுரை நிகழ்வு


**1978-ஆம் ஆண்டு, மதுரையில் ஒரு திருமண நிகழ்வு மற்றும் பொதுக்கூட்டத்துக்கு கலைஞர் செல்ல வேண்டி இருந்தது. அப்போது அவருக்கு கருப்புக் கொடி காட்ட சிலர் திட்டமிட்டனர். இதையறிந்து தென்மாவட்டங்களைச் சேர்ந்த கழகத் தொண்டர்கள் நிகழ்வுக்கு முதல்நாளே மதுரை வந்து குவிந்தனர். இதனால், மதுரை ரயில் நிலையத்தில் இறங்குவது கடினம் என்பதால், கொடை ரோட்டில் இருந்து அழைத்துச் செல்ல மதுரை நிர்வாகிகள் முடிவு செய்தனர். ஆனால், கலைஞர் மதுரை செல்வதை அறிந்து ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் கழகத் தொண்டர்கள் கூடியதால், ரயில் கொடைரோடு சேர தாமதமானது. அங்கும் தொண்டர்கள் திரண்டு, மதுரைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். கலைஞர் மதுரையில் இருந்த நாளில், கருப்புக் கொடி காட்ட யாரும் முன்வரவில்லை.**

### பெருமை சேர்க்கும் விளையாட்டு!

செஸ் ஒலிம்பியாட் போட்டியைத் திறம்பட நடத்தி உலக அரங்கில் பெயர் வாங்கியது தமிழ்நாடு. அதுபோல தற்போது சென்னையில் நடைபெறும் ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கி தொடர் தமிழ்நாட்டின் உபசரிப்புக்கு மீண்டும் புகழை சேர்த்து உள்ளது. பாகிஸ்தான் அணியினர் மிகுந்த உற்சாகத்துடன் தங்கள் நாட்டில் இருப்பது போல உணர்கிறோம் என கூறியுள்ளனர். இரண்டு நாடுகளுக்கும் இடையே நீடிக்கும் அரசியல் பதற்றங்கள் விளையாட்டிலும் எதிரொலிக்கின்றன. இந்த நிலையில் சென்னையில் விளையாடிய பாகிஸ்தான் அணியினர், தமிழ்நாட்டின் உபசரிப்பு, ரசிகர்களின் மனநிலை ஆகியவை பாதுகாப்பான சூழலைத் தருவதாக புகழ்ந்துள்ளனர். இந்த வீடியோ காட்சி தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 203

எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.